**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S No.844/2019**

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைமணி | சாதி | |
| த/பெ | சண்முகம் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம் | | வயது | |
| | | தேதி | 02.11.2022 |

இன்று (02.11.2022) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வாதியையும் அவரது கணவரையும் நீதிமன்றத்திற்கு வந்த பின்புதான் தெரியும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புரோநோட்டை நான் பார்வையிடவில்லை. இந்த வழக்கு தவிர மற்றொரு வழக்கு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் இதே வாதி என் மீது தாக்கல் செய்துள்ளார். அது தவிர வேறு வழக்குகள் கிடையாது. விழுப்புரம் வட்டம், திருச்சி மெயின்ரோடு, ஜானகிபுரம் கிராமத்தை சேர்ந்த கோவிந்தசாமி மகன் சந்திரசேகரை தெரியும். வாதி மற்றும் அவரது கணவர் ஸ்ரீகாந்த் ஆகியோர் எனக்கு நன்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக அவர்களை தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு வழக்குகள் தவிர வேறு வழக்குகள் என்மீது உள்ளது என்று சொன்னால் சரியல்ல. முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.639/2017 என்ற வழக்கு வாதியின் கணவர் ஸ்ரீகாந்த் என்பவர் என் மீதும் சந்திரசேகர் என்பவர் மீதும் தாக்கல் செய்து அந்த வழக்கு 24.09.2018ம் தேதி எங்களுக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு அந்த வழக்கு குறித்த விபரம் நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள 'வருவாய் வில்லைமீது உள்ள கையொப்பம் மற்றம் அதன் கீழ் உள்ள கையொப்பம் ஆகியவை என்னுடையதுபோல் உள்ளது ஆனால் என்னுடையது இல்லை. 10.01.2014 தேதி

வாதியிடம் ரூ.2,00,000/- கடனாக வாங்கி அதற்கு மாதம் ரூ.100/-க்கு ரூ1/- வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ஒரு புரோநோட்டை நானே எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது புரோநோட் எழுதிகொடுக்கவில்லை என்றும் கடன் வாங்கவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 02.12.2016ம் தேதி ரூ1000/- வரவு வைத்து என் கைப்பட எழுதிகொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பலமுறை கடனை திருப்பிகேட்டும் கடனை திருப்பி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் கடனே வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் நான்தான் கையொப்பம செய்துள்ளேன். நான் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் கையொப்பம் செய்வேன். நான் எதிருரையில் வாதி கதிர்வேல் என்பவர் மீது நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன். அந்த ் வழக்கு எண் எனக்கு தெரியாது. கதிர்வேல் என்பவருக்கு ஆதரவாக நான் பேசியபோது வாதி என்னை ஜெயிலுக்கு அனுப்புவேன் என்று மிரட்டியதாக எதிருரையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு எந்த தேதியில் சொன்னார் என்று ஞாபகம் இல்லை. நான் வாதி பெயரில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால்தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு பதிலறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன். எனக்கும் வாதிக்கும் விரோதம் இல்லை. நான் வியாபாரத்திற்காக வாதியிடம் கடன் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியானவர் விழுப்புரம் மேல்செட்டிதெருவில் வசிக்கின்றார் என்றால் எனக்கு தெரியாது. நான் ஹார்டுவேர் கடையில் வேலை செய்கிறேன். வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
S/d-A.Tamilselvan
I Additional Subordinate Judge,
Villupuram